FTB

Register No. | | | | | | | |

**4586-20**

(For the candidates admitted from 2009-2010 to 2015-2016)

## B.A.B.L./B.A.LL.B. DEGREE EXAMINATIONS, JANUARY 2021.

(Five-year Regular Course)

Fifth Year – Ninth Semester

## CIVIL PROCEDURE CODE

**Time : Three hours** **Maximum : 100 marks**

### PART A — (3 × 12 = 36 marks)

**Answer THREE of the following in not exceeding six pages each.**

ஒவ்வொரு கேள்விக்கும் ஆறு பக்கங்களுக்கு மிகாமல் பின்வருவனவற்றுள் மூன்றிற்கு விடையளிக்கவும்.

1. "When once time has begun to run, no subsequent disability or inability to sue stops it". Explain.

   "ஒரு முறை காலம் ஓடத்தொடங்கிவிட்டால் அதன் பிறகு வழக்கு தொடுக்க ஏற்படும் தகுதியின்மை அல்லது இயலாமை என்பது அதனை நிறுத்த இயலாது" – விளக்குக.

2. Discuss in detail the procedure for filing a suit by and against Trust.

   தொண்டு நிறுவனம் வழக்கொன்று தாக்கல் செய்ய மற்றும் அதன் மீது வழக்கு தொடர்வதற்கான நடைமுறை விதிகளை விவரி.

3. What are the methods by which a Decree may be executed? Enumerate the properties which cannot be attached and sold in execution of a decree?

   எந்தெந்த முறைகளில் ஒரு தீர்ப்பாணை நிறைவேற்றப்படலாம்? தீர்ப்பாணையை நிறைவேற்றுவதற்கு எந்தெந்த சொத்துக்கள் பற்றுகை மற்றும் விற்பனைக்கு கட்டுப்பட்டதல்ல என்பதை வரிசைப்படுத்திக் கூறுக.

4. Elucidate the grounds for filing Revision Petition before the High Court.

   உயர்நீதிமன்றத்தில் சீராய்வு மனு தாக்கல் செய்வதற்கான காரணிகளை விவரிக்கவும்.

5. What are the different modes of Service of Summons under C.P.C.?

   உரிமையியல் நடைமுறைச் சட்டத்தின் கீழ் அழைப்பாணையைச் சார்வு செய்யக் கூறப்படும் பல்வேறு வகைமுறைகளைக் கூறுக.

### PART B — (8 × 6 = 48 marks)

6. Write short answers on EIGHT of the following in not exceeding two pages each :

   ஒவ்வொரு கேள்விக்கும் இரண்டு பக்கங்களுக்கு மிகாமல் பின்வருவனவற்றுள் எட்டிற்கு குறுகிய விடைகள் எழுதுக.

   (a) Summary suits
   சுருக்குமுறை வழக்குகள்

   (b) Different kinds of decrees
   தீர்ப்பாணைகளின் பல்வேறு வகைகள்

   (c) Doctrine of Res judicata
   முன்தீர்ப்பின் தடைக் கோட்பாடு

   (d) Receiver
   உடைமைக் காப்பாளர்கள்

(e) Judgment debtor
தீர்ப்புக் கடனாளி

(f) Abatement of suits
வழக்கறவு

(g) Set-off
சரியீடு

(h) Precept
பற்றாணை

(i) Restitution
மீட்டளிப்பு

(j) Representative suits.
சார்பாண்மை வழக்கு.

## PART C — (4 × 4 = 16 marks)

**Answer FOUR of the following (not exceeding two pages each) by referring to relevant provisions of Law and decided cases with cogent reasons.**

**பின்வருவனவற்றுள் நான்கிற்கு (ஒவ்வொரு கேள்விக்கும் இரண்டு பக்கங்களுக்கு மிகாமல்) சட்ட வகையங்கள் மற்றும் தீர்மானிக்கப்பட்ட வழக்குகளைக் கூறி தகுந்த காரணங்களுடன் விடையளிக்கவும்.**

7. Kumar entrusted valuable gold jewels to Ramesh as his agent. Raju, alleging that the gold jewels were wrongfully obtained from him by Kumar, claims them from Ramesh. Whether Ramesh can institute interpleader suit against Kumar and Raju.

குமார் தனது முகவர் ரமேஷிடம் முகவர் என்ற அடிப்படையில் தங்க நகைகளை ஒப்படைக்கிறார். ராஜு என்பவர் அந்த தங்க நகைகளை குமார் தன்னிடமிருந்து சட்ட விரோதமாக பெற்றதாக சொல்லி நகைகளை தன்னிடம் ஒப்படைக்குமாறு ரமேஷிடம் கோருகிறார். ரமேஷ் என்பவர் குமார் மற்றும் ராஜுக்கு எதிராக இடைப்பாத்திய வழக்கு தொடரலாமா?

8. Rangan filed a suit for partition against his son Rajan and daughter Kamala. Rangan died during the pendency of the suit. State whether Rangan's wife is entitled to proceed with the suit.

ரங்கன் என்பவர் ஒரு பாகப்பிரிவினை வழக்கினை தன் மகனான ராஜன் மற்றும் மகளான கமலா ஆகியோருக்கு எதிராக தாக்கல் செய்தார். வழக்கு நிலுவையில் இருக்கும் பொழுது ரங்கன் இறந்து விடுகிறார். ரங்கனின் மனைவி வழக்கைத் தொடர்ந்து நடத்த முடியுமா என்பதை கூறுக.

9. Kuppusamy residing at Trichy owning three acres of Wetland agreed to give the same for cultivating paddy to Ramasamy for a period of three years. Ramasamy agreed to give fifteen bags of paddy every year. Ramasamy refused to give 15 bags in the 2nd year of lease period. What are the remedies available for Kuppusamy?

திருச்சியில் வசிக்கும் குப்புசாமி என்பவர் தனக்கு சொந்தமான மூன்று ஏக்கர் நன்செய் நிலங்களை நெல் பயிர் விவசாயம் செய்வதற்காக, மூன்று ஆண்டு காலங்களுக்கு ராமசாமியிடம் கொடுக்கிறார். இராமசாமி ஆண்டொன்றுக்கு பதினைந்து மூட்டைகள் நெல் கொடுப்பதாக ஒத்துக் கொள்கிறார். குத்தகைக் காலமான, இரண்டாவது ஆண்டில் 15 மூட்டைகள் கொடுக்க மறுக்கிறார்? குப்புசாமி என்பவருக்கு இருக்கின்ற தீர்வழிகள் என்ன?

10. 'A' agreed to sell his land to 'B' for Rs.50 lakhs and an advance of Rs.5 lakhs was paid by 'B'. The agreement was registered. Now 'A' intends to sell the land to 'C' for a higher price. What are the remedies available to 'B'? Advise.

'A' என்பவர் 'B' என்பவருக்கு தன்னுடைய இடத்தை ரூ.50 லட்சத்திற்கு விற்பனை செய்ய ஒப்புக் கொண்டு, 'B' என்பவர் முன்பணமாக ரூ.5 லட்சத்தை தந்தார். ஒப்பந்தம் பதிவு செய்யப்பட்டது. இப்பொழுது 'A' என்பவர் அந்த மனையை 'C' என்பவருக்கு அதிக விலைக்கு விற்பனை செய்ய விரும்புகிறார். 'B' என்பவருக்கு இருக்கக்கூடிய தீர்வழிகள் யாவை? ஆலோசனை கூறுக.

11. 'B' published a defamatory statement against 'A'. Hence, 'A' filed a suit against 'B' for claiming damages. Afterwards 'B' died leaving his son 'C' as legal heir. Whether the suit will continue against 'C'?

'ஆ' என்பவர் 'அ' என்பவருக்கு எதிராக சில அவதூறு சங்கதிகளை வெளியிடுகிறார். ஆகவே 'அ' என்பவர் 'ஆ' என்பவருக்கு எதிராக நஷ்டஈடு கோரி வழக்கு தாக்கல் செய்கிறார். அதன் பின் 'இ' என்பவரை வாரிசாக விட்டு விட்டு 'ஆ' இறந்து விடுகிறார். அந்த வழக்கு 'இ' என்பவருக்கு எதிராக தொடர்ந்து நீடிக்குமா?

12. A suit was filed by Kiran for declaration against Ramu. The suit was posted for enquiry on 28th November 2016. Unfortunately Kiran could not attend the court on 28-11-16 due to his illness. The court has dismissed the suit for non-appearance of the plaintiff for enquiry. What is the remedy available to Kiran?

கிரன் என்பவர் விளம்புகை வழக்கினை ராமு என்பவருக்கு எதிராக தொடுத்திருந்தார். வழக்கு 28-ந் தேதி நவம்பர் 2016-க்கு விசாரணைக்காக இருந்தது. துரதிருஷ்டவசமாக கிரனால் நீதிமன்றத்திற்கு 28/11/16-ந் தேதி அவருடைய உடல்நலக் குறைவால் செல்ல முடியவில்லை. வாதி விசாரணைக்கு வராததால் நீதிமன்றம் அவ்வழக்கை இரத்து செய்தது. கிரனுக்கு உள்ள தீர்வழிகள் என்ன?

FTA

Register No.

**4585–20**

(For the candidates admitted from 2009-2010 to 2015-2016)

**B.A. B.L./B.A. LL.B. DEGREE EXAMINATIONS, JANUARY 2021.**

**(Five-year Regular Course)**

**Fifth Year – Ninth Semester**

**CRIMINAL PROCEDURE CODE**

**Time : Three hours** **Maximum : 100 marks**

**PART A — (3 × 12 = 36 marks)**

**Answer THREE of the following in not exceeding six pages each.**

ஒவ்வொரு கேள்விக்கும் ஆறு பக்கங்களுக்கு மிகாமல் பின்வருவனவற்றுள் மூன்றிற்கு விடையளிக்கவும்.

1. State the circumstances under which a police officer can arrest a person without warrant.
எந்த சூழ்நிலைகளின் கீழ் காவல்துறை அதிகாரி பிடியாணையின்றி ஒரு நபரை கைது செய்ய இயலும் என்பதனை விவரிக்கவும்.

2. Explain the provisions of Cr.P.C. 1973 relating to Summary Trial.
குற்றவியல் நடைமுறைச் சட்டம், 1973ல் சுருக்கமான விசாரணை தொடர்பான விதிமுறைகளை விளக்கவும்?

3. Differentiate the statements recorded under Sec. 161 and 164 of Cr.P.C., 1973.
குற்றவியல் நடைமுறைச் சட்டம், 1973ல் பிரிவு 161 மற்றும் பிரிவு 164யின் கீழ் பதிவு செய்யப்பட்ட வாக்குமூலங்களை வேறுபடுத்துக.

4. "A person once convicted or acquitted shall not be tried again for the same offence". Comment. Are there any exceptions to this rule?
"ஒரு முறை குற்றம் சாட்டப்பட்ட அல்லது விடுவிக்கப்பட்ட ஒரு நபர் அதே குற்றத்திற்காக மீண்டும் விசாரணை செய்யப்படமாட்டார்" கருத்து தெரிவிக்கவும். இந்த விதிக்கு ஏதேனும் விதிவிலக்குகள் உள்ளனவா?

5. Discuss the formation, powers and orders that can be passed by Juvenile Justice Board.
இளஞ்சிறார் நீதித்துறை வாரியத்தின் உருவாக்கம், அதிகாரங்கள் மற்றும் நிறைவேற்றப்படும் உத்தரவுகளை பற்றி விவாதிக்கவும்.

**PART B — (8 × 6 = 48 marks)**

6. Write short answers on EIGHT of the following in not exceeding two pages each :
ஒவ்வொரு கேள்விக்கும் இரண்டு பக்கங்களுக்கு மிகாமல் பின்வருவனவற்றுள் எட்டிற்கு குறுகிய விடைகள் எழுதுக.

(a) Assistant Public Prosecutor
உதவி குற்றவியல் அரசு வழக்கறிஞர்

(b) Bail in a Non-Bailable offence
பிணையில் விடமுடியாத குற்றத்திற்கான பிணையம் பெறுதல்

(c) Final Report
இறுதி அறிக்கை

(d) Admonition
கண்டிப்பு

(e) Victim Compensation
பாதிப்பாளர் சரியீடு (இழப்பீடு)

(f) Investigation
புலன் விசாரணை

(g) Proclamation
பிரகடனம்

(h) Child Welfare Committee
குழந்தைகள் நலவாரியக் குழு

(i) Inherent power of High Court
உயர்நீதிமன்றத்தின் உள்ளார்ந்த அதிகாரம்

(j) Compounding of offence.
குற்றச் சமாதானம்/குற்ற சமரசம்.

**PART C — (4 × 4 = 16 marks)**

**Answer FOUR of the following (not exceeding two pages each) by referring to relevant provisions of Law and decided cases with cogent reasons.**

பின்வருவனவற்றுள் நான்கிற்கு (ஒவ்வொரு கேள்விக்கும் இரண்டு பக்கங்களுக்கு மிகாமல்) சட்ட வகையங்கள் மற்றும் தீர்மானிக்கப்பட்ட வழக்குகளைக் கூறி தகுந்த காரணங்களுடன் விடையளிக்கவும்.

7. 'R' is an accused of offence of theft in one occasion and causing grievous hurt on another occasion. Can 'R' be charged and tried in one trial?
'R' என்பவர் மீது ஒரு தருவாயில் திருட்டு வழக்கில் குற்றம்சாட்டப்பட்டும் மற்றொரு தருவாயில், கொடுங்காயம் விலைவித்த குற்றத்திற்காக குற்றமும் சாட்டப்பட்டுள்ளது. 'R' என்பவர் மீதுள்ள இரண்டு குற்றச்சாட்டுகளையும் ஒன்றாக சேர்த்து ஒரே வழக்காக விசாரணை செய்ய முடியுமா?

8. 'A' commits defamation of 'B', a yoga teacher. Can a disciple of 'B' file a complaint for defamation?
'அ' என்கிற நபர் 'ஆ' என்கிற யோகா ஆசிரியர் மீது அவதூறு செய்கிறார், இங்கு 'ஆ'-வின் சீடரான "அ" 'ஆ' மீது அவதூறு குற்றத்திற்காக முறையீடு செய்ய முடியுமா?

9. 'X' wants to file a case against 'Y', for an offence punishable with fine only. The offence was committed one year back. Decide.
'Y' என்பவரால் ஒரு வருடத்திற்கு முன்பாக செய்யப்பட்ட குற்றத்திற்காக 'X' என்கிற நபர் 'Y' என்பவருக்கு எதிராக அபராதம் மட்டும் விதிக்கக் கூடிய தண்டனை குற்றத்திற்கான வழக்கு தொடுக்க விழைகிறார்-விவாதிக்க.

10. Ramu aged 60 years, intends to claim maintenance from his daughter Nirmala. Can he claim maintenance?
60 வயதான ராமு என்பவர், நிர்மலா என்கிற தனது மகளிடமிருந்து ஜீவனாம்சம் கோர விரும்புகிறார். அவர் ஜீவனாம்சம் கோர முடியுமா?

11. 'X' is wounded within the local limits of the jurisdiction of court 'Y' and dies within the local limits of the jurisdiction of court 'Z'. Which court is having jurisdiction to try the offence of culpable homicide?
'Y' என்ற நீதிமன்ற ஆள்வரை வரம்பிற்குள் 'X' என்பவர் காயமுறுகிறார். மேலும் 'Z' என்ற நீதிமன்ற ஆள்வரை வரம்பிற்குள் இறந்துவிடுகிறார். இதில் எந்த நீதிமன்றத்திற்கு கொலையாகாத மரணம் விளைவித்த குற்றத்திற்காக, குற்ற விசாரணையை செய்வதற்கு ஆள்வரை வரம்பு உள்ளது.

12. A case is committed to the Judicial Magistrate of First class for trial by Sessions Court under Sec.307 of Cr.P.C., 1973. Which court has the jurisdiction and power that could tender pardon to the accused?
ஒரு வழக்கு அமர்வு நீதிமன்றத்தால், விசாரணைக்காக குற்றவியல் நடைமுறைச் சட்டம் 1973ல், பிரிவு. 307யின் கீழ் முதல் வகுப்பு நீதித்துறை நடுவர் மன்றத்திற்கு அனுப்படுகிறது. இதில் எந்த நீதி மன்றத்திற்கு குற்றம் சாட்டப்பட்டவருக்கு மன்னிப்பு வழங்கும் ஆள்வரை மற்றும் அதிகாரம் உள்ளது?

FTC

Register No.

4587–20

(For the candidates admitted from 2009-2010 to 2015-2016)

**B.A.B.L/ B.A.LL.B. DEGREE EXAMINATIONS, JANUARY 2021.**

(Five – year Regular Course)

Fifth Year – Ninth Semester

## TAXATION LAW

Time : Three hours | Maximum : 100 marks

**PART A — (3 × 12 = 36 marks)**

**Answer THREE of the following in not exceeding six pages each.**

**ஒவ்வொரு கேள்விக்கும் ஆறு பக்கங்களுக்கு மிகாமல் பின்வருவனவற்றுள் மூன்றிற்கு விடையளிக்கவும்.**

1. Narrate the significance of 101st Amendment of the Constitution of India.

இந்திய அரசியலமைப்பு சட்டத்தில் ஏற்படுத்தப்பட்டிருக்கும் 101–வது சட்டத் திருத்தத்தின் முக்கியத்துவத்தை எடுத்துக் கூறுக.

2. Explain Transaction Value under the Tamil Nadu Goods and Services Tax Act, 2017.

தமிழ்நாடு சரக்குகள் மற்றும் சேவை வரிச் சட்டம் 2017–ன் பரிமாற்ற மதிப்பை விளக்கிக் கூறுக.

3. What is Capital Gain? What are the kinds of Capital Gains? What are the deductions available in each kind of Capital Gains?

மூலதன ஆதாயம் என்றால் என்ன? மூலதன ஆதாயங்களின் வகைகள் யாவை? ஒவ்வொரு வகை மூலதன ஆதாயத்திற்கும் அனுமதிக்கப்படும் கழிவுகள் யாவை?

4. Give an account of the "Prohibited Goods" and "Dutiable Goods" under the Customs Act, 1962.

சுங்கத் தீர்வைச் சட்டம் 1962–ன் கீழ் வரும் "தடை செய்யப்பட்ட பொருட்கள்" மற்றும் "தீர்வை விதிக்கக்கூடிய பொருட்கள்" குறித்து தொகுத்துக் கூறுக.

5. What is 'Black money'? How this can be controlled and eradicated?

'கருப்புப் பணம்' என்றால் என்ன? அதை எவ்வாறு ஒழிக்கவும், கட்டுப்படுத்தவும் இயலும்?

**PART B — (8 × 6 = 48 marks)**

6. **Write short answers on EIGHT of the following in not exceeding two pages each.**

**ஒவ்வொரு கேள்விக்கும் இரண்டு பக்கங்களுக்கு மிகாமல் பின்வருவனவற்றுள் எட்டிற்கு குறுகிய விடைகள் எழுதுக.**

(a) Relation between the Finance Act and the Income Tax Act.
வருமான வரி சட்டத்திற்கும் நிதி சட்டத்திற்கும் உள்ள தொடர்பு

(b) Written down value
குறைத்து எழுதப்பட்ட மதிப்பு

(c) Previous year
முந்தைய ஆண்டு

(d) Income from Salary
சம்பள வருமானம்

(e) Residential Status of Individual
ஒரு நபரின் இருப்பிட நிலை

(f) Zero rated supply in CGST Act
மத்திய சரக்கு மற்றும் சேவை வரி சட்டத்தில் பூஜ்ஜிய மதிப்பீட்டு வழங்கல்

(g) Assessee
மதிப்பீட்டிற்குரியவர்

(h) Appeals and Revision under the CGST Act, 2017.
2017 ஆம் ஆண்டு மத்திய சரக்கு மற்றும் சேவை வரி சட்டத்தின் கீழ் மேல்முறையீடு மற்றும் சீராய்வு.

(i) Work Contract
பணி ஒப்பந்தம்

(j) Casual Trader
தற்செயல் வணிகர்

## PART C — (4 × 4 = 16 marks)

**Answer FOUR of the following (not exceeding two pages each) by referring to provisions of Law.**

**பின்வருவனவற்றுள் நான்கிற்கு (ஒவ்வொரு கேள்விக்கும் இரண்டு பக்கங்களுக்கு மிகாமல்) சட்ட வகையங்களைக் கூறி விடையளிக்கவும்.**

7. Explain the Deductions and Exemptions permissible under the Income Tax Act, for the following:

வருமான வரிச் சட்டத்தின்படி கீழ்கண்டவைகளுக்கான விலக்குகள் மற்றும் கழிவுகளை கூறுக:

(a) Deduction of money paid to Gaja cyclone Relief
கஜா புயலிற்கு அளிக்கப்பட்ட பணத்திற்கு அனுமதிக்கப்பட்ட கழிவு

(b) Exemption of income from commutation of pension, for a Government Servant
அரசு ஊழியர் ஓய்வு ஊதியத்தின் ஒரு பகுதியை மொத்தமாக பெறும்போது அளிக்கப்படும் விலக்கு

8. Narrate the liability to pay I.T. for the Previous Year 2018-2019 under the following circumstances.

பின்வரும் சூழ்நிலைகளில் 2018–19–ம் முந்தைய ஆண்டிற்கு வருமான வரி செலுத்த வேண்டிய கடப்பாட்டை எடுத்துக் கூறுக.

(a) Retrenchment compensation given to an employee
ஒரு பணியாளருக்கு ஆட்குறைப்பால் வழங்கப்பட்ட இழப்பீடு

(b) Amount spent for the medical expenses for the father of the assessee
மதிப்பீட்டிற்குரியவரின் தந்தையினுடைய மருத்துவ செலவு

9. A State employee received income for the Previous Year 2018-19 as follows.

| | |
|---|---|
| Basic Salary | – Rs. 3,00,000 p.a. |
| D.A. | – Rs. 2,00,000 p.a. |
| H.R.A. | – Rs. 1,00,000 p.a. |
| M.A. | – Rs. 16,000 p.a. |

House rent paid Rs.8,000/- per month. Whether employee is eligible for IT exemption under HRA. State the liability of HRA exemption.

ஒரு அரசு ஊழியர் முந்தைய ஆண்டு 2018–19 பெற்ற வருமானம் பின் வருமாறு

| | |
|---|---|
| அடிப்படை சம்பளம் | – ரூ. 3,00,000 வருடத்திற்கு |
| அகவிலைப்படி | – ரூ. 2,00,000 வருடத்திற்கு |
| வீட்டு வாடகைப்படி | – ரூ. 1,00,000 வருடத்திற்கு |
| மருத்துவப்படி | – ரூ. 16,000 வருடத்திற்கு |

வீட்டு வாடகையாக மாதம் ரூ.8,000 செலுத்துகிறார். ஊழியர் வருமான வரிக் கழிவாக வீட்டு வாடகைப்படியை கழிக்க முடியுமா? வீட்டு வரியின் கழிவினைப் பற்றி மட்டும் அவருடைய கடப்பாட்டினை கூறவும்.

10. State the Tax ceiling limit of a Senior Citizen and a Super Senior Citizen.

மூத்த குடிமக்கள் மற்றும் மிகவும் மூத்த குடிமக்களுடைய வருமான வரி உச்சவரம்பினைக் கூறவும்.

11. Customs value of imported goods is Rs.4,00,000/-. Basic customs duty payable is 10%. The goods should be imported to India. IGST is 18%. Find out the customs duty.

இறக்குமதி செய்யப்பட்ட பொருளின் விலை ரூ.4,00,000/-. அடிப்படையாக சுங்க வரி செலுத்துவது 10 சதவீதம். இந்தியாவிற்கு பொருட்கள் இறக்குமதி ஆகிறது. IGST என்பது 18%. சுங்க வரியைக் கணக்கிடுக.

12. Mr. Kannan came to India for the first time in 1st January 2012 and has been staying here since then. Determine his residential status for the assessment year, 2019-2020.

திரு. கண்ணன் என்பவர் முதன்முறையாக 1.1.2012 –ம் ஆண்டு இந்தியாவிற்கு வந்தார். அன்றிலிருந்து இந்தியாவில் இருந்து வருகிறார். 2019–2020 வரிவிதிப்பாண்டின்படி கண்ணனின் குடியிருப்புத் தகுதியை கண்டுபிடிக்கவும்.

---